# பொன் வித்யாஷ்ரம் குழுமப்பள்ளிகள்

## தமிழ் பாடக்குறிப்புகள் (2026-2027)

வகுப்பு: ஐந்து
மாதம்: ஏப்ரல்

பாடத்தலைப்புகள்:

* வேண்டும் வேண்டும் (செய்யுள்)
* நாட்டு வாழ்த்து (செய்யுள்)
* சிலந்தியும் ஆமையும் (உரைநடை
* திருக்குறள் (செய்யுள்)
* தமிழ் எழுத்துகள் (இலக்கணம்)

செயல்பாடுகள்:

செயல்பாடு-1
எழுதுதல் (ப.எண்-5)
பயிற்சி நூல்
பயிற்சித்தாள்-1 (ப.எண்-10)
செயல்பாடு-2
படித்தல் (ப.எண்-6).

PAGE No.
DATE / /

# வேண்டும் வேண்டும்

## I. வினா - விடை:

1. எதற்காக ஓயாது உழைக்க வேண்டும்

வாழ்வில் உயர வேண்டும் என்றால் முயற்சியைக் கைவிடாமல் ஓயாது உழைக்க வேண்டும்.

2. அந்நியரை நம்பி வாழ்வதை ஏன் ஆசிரியர் இழிவாகக் கருதுகிறார்?

நாம் உண்ணும் உணவுக்கும், உடுத்தும் ஆடைக்கும் அந்நியரை நம்பி வாழ்வதை ஆசிரியர் இழிவாகக் கருதுகிறார்.

3. உலகம் போற்ற நாம் என்ன செய்ய வேண்டும்?

உலகம் போற்ற நாம் காந்தியின் வழியைப் பின்பற்றி நடக்க வேண்டும்

4. ஆக்கம் என்பதன் பொருள் யாது?

ஆக்கம் என்பதன் பொருள் உயர்வு ஆகும்.

Scanned with OKEN Scanner

# நாட்டு வாழ்த்து

I. வினா-விடை:

1. மகாகவி பாரதியார் எழுதிய நூல்கள் யாவை?

மகாகவி பாரதியார் எழுதிய நூல்கள்:
* கண்ணன் பாட்டு
* குயில் பாட்டு
* பாஞ்சாலி சபதம்

2. நம் நாட்டை எப்படி வாழ்த்த வேண்டும்?

நம் நாட்டை வணங்கி மனதில் வைத்து வாயால் வாழ்த்த வேண்டும்.

3. நம் நாட்டை எப்படி வணங்க வேண்டும்?

நம் நாட்டை 'வந்தே மாதரம், வந்தே மாதரம்' என்று கூறி வணங்க வேண்டும்.

4. நம் நாடு எப்படிப்பட்ட சிறந்த நாடு என்று பாரதியார் கூறுகிறார்?

நம் நாட்டின் ஆயிரம் ஆண்டுகள் வாழ்ந்த நம் முன்னோர்களின் எண்ணங்களால் நம் நாடு சிறந்து விளங்குகிறது என்று பாரதியார் கூறுகிறார்.

# சிலந்தியும் ஆமையும் [உரைநடை]

## I. வினா-விடை:

1. அனான்சி எப்படிப்பட்டது?

அனான்சி மிகவும் பேராசை பிடித்தது

2. அனான்சி என்ன சமைத்துக் கொண்டிருந்தது?

அனான்சி சேனைக் கிழங்குகளைச் சமைத்துக் கொண்டிருந்தது.

3. கோசோ அனான்சியிடம் என்ன கேட்டது?

கோசோ அனான்சியிடம் நான் களைப்புடனும், பசியுடனும் இருப்பதால் இன்று உன்னுடன் சாப்பிடலாமா? என்று கேட்டது.

4. அனான்சி, கோசோவிடம் என்ன சொல்லி அதைச் சாப்பிடவிடவில்லை?

அனான்சி கோசோவிடம் சாப்பிடுவதற்கு முன்னால் கைகளைச் சுத்தமாகக் கழுவி வா! என்று சொல்லி அதைச் சாப்பிட விடவில்லை.

Scanned with OKEN Scanner

5. கோசோ அனான்சியை எப்படி வரவேற்றது?

கோசோ அனான்சியிடம் என் அழைப்பை ஏற்றுச் சாப்பிட வந்ததற்கு நன்றி! வா, சாப்பிடலாம்! என்று கூறி வரவேற்றது.

## திருக்குறள்

I. வினா - விடை:

1. வாய்மை எனப்படுவது யாது?

வாய்மை எனப்படுவது எது என்றால் அது மற்றவர்க்கு ஒரு சிறிதும் தீமை இல்லாத சொற்களைச் சொல்லுதல் ஆகும்.

2. வாய்மை எனக் கருதத்தக்க இடங்கள் யாவை? என வள்ளுவர் கூறுகிறார்?

குற்றம் நீங்கிய நன்மையைத் தரக்கூடிய பொய்யான சொற்களும் வாய்மை என்று கருதத்தக்க இடங்கள் ஆகும் என வள்ளுவர் கூறுகிறார்.

Scanned with OKEN Scanner

3. எது நெஞ்சத்தை வருத்தக்கூடியது?

தன் நெஞ்சம் அறிந்து ஒருவர் பொய் கூறக்கூடாது. அவ்வாறு கூறினால் தன் நெஞ்சமே தன்னை வருத்தும்.

4. உலகத்தாரின் உள்ளங்களில் இருப்பவர் யார்?

ஒருவர் தன் உள்ளம் அறியப் பொய் பேசாமல் இருந்தால் அத்தகையவர் உலகத்தாரின் உள்ளங்களில் இருப்பவர் ஆவார்.

5. யார் சிறந்தவர் என வள்ளுவர் கூறுகிறார்?

ஒருவர் தன் மனத்தோடு பொருந்துமாறு உண்மை பேசினால், அவர் ஒரே நேரத்தில் தவத்தோடு தானமும் செய்பவரைவிடச் சிறந்தவர் ஆவார் என வள்ளுவர் கூறுகிறார்.

Scanned with OKEN Scanner

# தமிழ் எழுத்துகள் (இலக்கணம்)

I. நிரப்புக:

1. உயிர் எழுத்துகள் மொத்தம் 12
2. மெய் எழுத்துகள் மொத்தம் 18
3. உயிர் மெய் எழுத்துகள் மொத்தம் 216
4. ஆய்த எழுத்து ஒன்று அது ஃ
5. உயிர்க்குறில் எழுத்துகள் ஐந்து அவை அ, இ, உ, எ, ஒ
6. உயிர்நெடில் எழுத்துகள் ஏழு அவை ஆ, ஈ, ஊ, ஏ, ஐ, ஓ, ஔ
7. குறுகிய ஓசை உடைய எழுத்துகள் குறில் ஆகும்.
8. நீண்ட ஓசை உடைய எழுத்துகள் நெடில் ஆகும்.
9. மெய் எழுத்துகளின் வகைகள் மூன்று
10. வல்லின எழுத்துகள் ஆறு அவை க், ச், ட், த், ப், ற்
11. மெல்லின எழுத்துகள் ஆறு அவை ங், ஞ், ண், ந், ம்,
12. இடையின எழுத்துகள் ஆறு அவை ய், ர், ல், வ், ழ், ள